DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 263/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 3 | Caste | : |
| Name | : நாகஜோதி | Calling | : |
| Father / Husband Name | : தனபாலன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 28th July 2025.

---

(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

முதல் விசாரணை:-

1) நான் இலந்தங்குடிப்பட்டியில் வசித்து வருகிறேன். நானும் என் கணவரும் எங்கள் வீட்டிலேயே வைத்து சமையல் பாத்திரம் வாடகைக்கு விற்று வருகிறோம். என்னுடன் பிறந்த அண்ணன் பெயர் சிவக்குமார், இவ்வழக்கு எதிரியான விஜயக்குமார் என் தம்பி, என் தங்கை பெயர் கிருஷ்ணவேனி. புகார்தாரர் கலையரசி என் அம்மா. சம்பவ சமயம் எங்களுக்கு சொந்தமான சிவகங்கை திருப்பத்தூர் ரோட்டில் உள்ள சொந்த வீட்டில் கீழ் தளத்தில் என் அம்மாவும் மேல்மாடியில் எனது அண்ணனும் குடியிருந்து வந்தார்கள்.

2) மேற்படி வீடானது எனது அண்ணான சிவக்குமார் வெளிநாட்டிலிருந்து சம்பாரித்து அனுப்பிய பணத்தில் என் அப்பாவால் கட்டப்பட்டது ஆகும். என் தம்பியான வழக்கு எதிரி சொத்துக் கேட்டு என் அம்மாவிடம் அடிக்கடி பிரச்சனை செய்து வந்தார். அதனால் உறவினர்களை சொத்தை பிரித்துக் கொடுக்கலாம் என நினைத்து கடந்த 29.08.2021ம் தேதி மாலை திருப்பத்தூர் ரோட்டில் உள்ள வீட்டில் வைத்து பேசினோம். அப்போது நானும் எனது தங்கை, என் அம்மா, என் அண்ணன், என்

அத்தை ராணி, அத்தை மகள் மஞ்சுளா ஆகியோர்களும் எதிரி விஜயக்குமாரும் இருந்தோம்.

3) சொத்தை பிரித்து தர பேசியபோது எதிரி விஜயக்குமார் ஒத்துக்கொள்ளாமல் பெண் பிள்ளைகளுக்கு எல்லாம் சொத்துக் கொடுக்கக் கூடாது எனக் கூறி தகராறு செய்தார். என்னையும் என் அம்மா, என் தங்கை, என் அத்தை, என் அண்ணன் ஆகியோர்களை கையாலும் கம்பாலும் தாக்கி வீட்டின் ஜன்னல்களையும், பைப் லைன்களையும் சேதப்படுத்தி எங்களை கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்தார். மேற்படி சம்பவம் தொடர்பாக என் தம்பியான எதிரி விஜயக்குமார் மீது என் அம்மா புகார் மனு கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1) வீரய்யா என் மாமா என்றால் சரிதான். நாங்கள் பஞ்சாயத்து பேசியதாக சொல்லும் 29.08.2021 ம் தேதி மாலை எத்தனை மணிக்கு என்றால் மாலை 03.00 மணியிருக்கும். பஞ்சாயத்து பேசும் போது வீரய்யாவும் உடன் இருந்தாரா என்றால் ஆமாம். என் அம்மா புகார் கொடுக்கச் சென்றபோது நானும் உடன் சென்றேனா என்றால் ஆமாம். புகார் கொடுக்கச் சென்றபோது எத்தனை மணி இருக்கும் என்றால் 03.30 மணியிருக்கும். புகாரை என் அம்மா வாய்மொழியாகக் கொடுத்தாரா அல்லது எழுத்து மூலமாக கொடுத்தாரா என்றால் எழுதிக் கொடுத்தார்.

2) புகார் மனுவில் நானோ என் உடன் சென்றவர்களோ சாட்சி கையொப்பம் செய்தோமா என்றால் தெரியவில்லை. இந்த புகார் சம்பந்தமாக என்னை தனியாக விசாரணை செய்து ஆய்வாளர் வாக்குமூலம் பதிவு செய்தாரா என்றால் என்னை தனியாக விசாரிக்கவில்லை. நான் மருத்துவமனை சென்றேனா என்றால் ஆமாம் எனக்கு காயம் இல்லை. நான் மருத்துவமனை சென்றபோது எத்தனை மணியிருக்கும் என்றால் மாலை 05.00 மணியிருக்கும்.

3) சம்பவ நடந்ததாக சொல்லும் அன்று போலீசார் சம்பவ இடம் வந்து பார்த்தார்களா என்றால் ஆமாம். சம்பவ இடத்திலிருந்து பொருள்கள் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. சொத்துப் பிரச்சனை சம்பந்தமாக சிவில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம் என் அண்ணன் தாக்கல்

செய்துள்ளார். சிவில் வழக்கானது எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் வழக்கு சம்பவத்திற்கு பின்பு தான் தாக்கல் செய்யப்பட்டது.

4) நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் என் தம்பியான எதிரி விஜயகுமாருக்கு சொத்தில் பங்கு கொடுக்கக் கூடாது என்பதற்காக நானும் என் தங்கை, அண்ணன், எனது அம்மா ஆகியோர் சேர்ந்து பொய்யாக புனையப்பட்ட புகாரை கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.07.28 12:15:56 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.